1981 பிப்ரவரி 28]

திரு. ப. சுந்தரம்: இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர் யார்? அந்த ஒப்பந்தக்காரருக்கும் அங்கிருக்கிற பொறியாளருக்கும் இடையே காங்க்ரீட் போடுவதில் தகராறு ஏற்பட்டு வேலை நிறுத்தம் செய்யப்பட்டது. அந்த வேலை நிறுத்தம் காரணமாக பல நாட்கள், வேலைகள், நிறுத்தப்பட்டன. அந்த கான்க்ரீட் சரியாகப் போடப்பட்டுள்ளதா, அந்தப் பாலம் நல்லமுறையில் கட்டப்பட்டுள்ளதா என்பதை அரசு ஆராயுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: மூலக்கேள்வி, பாம்பாற்றின் குறுக்கே மேம்பாலம்கட்ட அரசு உத்தரவிட்டுள்ளதா? என்பதாகும். அதற்கு, உத்தரவிட்டு பாலம் கட்டி கடந்த 13—1—1981-ல் அது திறக்கப்பட்டு வாகனங்கள் போய்க்கொண்டிருக்கின்றன. ஆகவே பொறியாளர் பற்றியும் காண்ட்ராக்டர் பற்றியும் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் சாலைகள் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 315—திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியனில் உசிலம்பட்டியிலிருந்து லிங்கப்ப நாயக்கனூர் வரை 14 மைல் ரோடும், நல்லுத்தேவன்பட்டியிலிருந்து தும்மக்குண்டு வரை 11 மைல் ரோடும் கடந்த 8 ஆண்டு காலமாக ரோடு போடப்படாமலே இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இந்த இரண்டு சாலைகளின் வேலைகள் 1972-73-ம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இலஞ்ச ஒழிப்புத் துறையினர் இவ்வேலைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் இருப்பதைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட ஆவணங்களை கைப்பற்றிக் கொண்டனர். இவ்வேலைகளை மீண்டும் தொடர்ந்து செய்வதற்கு அத்துறையின் அனுமதி கேட்கப்பட்டும் இதுவரை ஒப்புதல் கிடைக்காததால், வேலைகளை மேற்கொண்டு தொடர முடியவில்லை.

[1981 பிப்ரவரி 28

திரு. எஸ். ஆண்டித்தேவர்: உசிலம்பட்டி பஞ்சாயத்து யூனியனில் உசிலம்பட்டியிலிருந்து லிங்கப்ப நாயக்கனூர் வரை 14 மைல் ரோடும் நல்லுத்தேவன்பட்டியிலிருந்து தும்மக்குண்டு வரை 11 மைல் ரோடும் எட்டு ஆண்டுகளாக போடப்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் அவ்வேவையில் தவறு கண்டுபிடிக்கப்பட்டு ஆவணங்களை குற்றப்பிரிவினர் ை ப்பற்றிக்கொண்டு இருப்பதனால் அந்த வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது என்றார்கள். எட்டாண்டுகளாக ஜல்லி அடித்து அந்த ரோடு அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. அந்த வழக்கு தீர வேண்டுமென்றால் உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை போய் அது முடிய ஏறத்தாழ இருபதாண்டுகள் ஆகும். எனவே அந்த வழக்கை நிறுத்திவிட்டு என்ஜினியர்களுக்கு உத்தரவு போட்டு ப்ரீ மெஷர்மெண்ட் எடுத்து உடனடியாக அந்த வேலையைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: லஞ்ச ஒழிப்புத் துறை இந்த வேலைகளை நிறைவேற்றுவதில் குறைபாடுகள் இருப்பதாகக் கண்டு அதனுடைய தஸ்தாவேஜ்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போனதின் காரணமாகத் தான் வேலையில் தடங்கல் ஏற்பட்டது. ஆனாலும் வருகிற காலத்தில் இந்தச் சாலையை தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய திட்டமிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தவறு செய்தவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன? அதை மறுபடியும் உடனடியாக பொறியாளர்களை வைத்து திட்டமிட்டு அந்த வேலையை செய்து முடிப்பதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் என்னிடம் இல்லை. ஆனாலும் யார் யார் குற்றம் செய்திருக்கிறார்களோ அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும், வேலையும் சீக்கிரமாகத் துவங்கப்படும்.

[முற்பகல் 9-50]

திரு. என். எஸ். வி. சித்தன்: மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மிகவும் பிற்பட்ட வட்டமாகும். கடந்த எட்டாண்டுக் காலமாக இந்தச் சாலை போடப்படாமல் இருப்ப

1981 பிப்ரவரி 28]

தால் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. யாரோ குற்றம் செய்தார்கள் என்பதற்காக அந்தப் பகுதி கிராம வாசிகளுக்குத் தண்டனை கொடுப்பதுபோல் இருக்கிறது. அரசாங்கம் உடனடியாக போர்க்கால நடவடிக்கைபோல் இதற்கு முன்னுரிமை கொடுத்து இந்தச் சாலையைப் போட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்ன பதிலைக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.

திரு. இரா. முத்தையா: பொதுவாக மதுரை மாவட்டம் நெடுஞ்சாலைத் துறையில் உசிலம்பட்டி சப்-டிவிஷன் வந்தும் இந்த அளவுக்கு ரோடு மோசமாக இருக்கும் அந்தப் பகுதியில் எட்டாண்டு காலமாக அந்த ரோடு போடப்படாமல் இருக்கிறது. மராமத்து வேலை கூட செய்யப்படாமல் இருக்கிறது. குற்றப் பிரிவு துறையினர் இதற்கு அனுமதி வழங்காவிட்டாலும் இன்னின்ன தவறு நடந்திருக்கிறது என்று படம் எடுத்துக் கொண்டாவது மராமத்து வேலைகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அந்தச் சாலை இந்த ஆண்டிலேயே தேசிய கிராமப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

மாவட்ட தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம்.

*வினா எண் 316—திரு. த. இராமசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் உள்ள இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் மிக முக்கியமான ஊசி மருந்துகள் இல்லாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்ற
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS